# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 07–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

## I.A. No. 04 of 2022 in O.S. No. 175 of 2004
## (CNR No. TNSA13-000073-2004)

1. முருகேசன்
2. கமலம்
3. பத்மாவதி .. மனுதாரர்கள் / வாதிகள்

எதிராக

1. ராமகிருஷ்ணன் (இறந்தவர்)
2. தையல் நாயகி .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்
3. பத்மினி
4. R. அருணாசலம் (இறந்தவர்)
5. V.N. முருகேசன்
6. P. ராஜேந்திரன்
7. C. அருண் பிரதீப்ராஜா (இறந்தவர்)
8. R. மாதேஸ்வரன்
9. M. ராஜசேகர்

*.. 2 ...*

10. விஜயா

11. ராஜகுமாரி

12. இளவர் அர்ஜுன் ஆதித்யா
 இளவருக்கு பாதுகாவலராக
 அவரது தாயார் ராஜகுமாரி .. 3 முதல் 12 உத்தேச தரப்பினர்கள்

***(இ.ம.வ.எண்.07/2025–ல் கடந்த 14.07.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி 7–ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்டார் என்றும், காலம்சென்ற 7–ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை 10 முதல் 12 எதிர்மனுதாரர்களாக மனுவில் சேர்க்க அனுமதிக்கப்பட்டும் மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)***

***(இ.ம.வ.எண்.08/2025–ல் கடந்த 30.10.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி மனுவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.)***

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 05.11.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P. ரவீந்திரன் அவர்களும், 1, 4, 7 எதிர்மனுதாரர்கள் காலமாகிவிட்ட நிலையில், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. சந்திரன் அவர்களும், 5, 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சந்திரசேகரன் அவர்களும் ஆஜராகியும், 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. முத்து அவர்கள் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினர்களாகியும், 6–ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

*.. 3 ...*

**<u>உத்தரவுரை</u>**

மனுதாரர்கள் / வாதிகள் இந்த மனுவை, 3 முதல் 12 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 3 முதல் 12 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டி தாக்கல் செய்துள்ளனர்.

2. **<u>மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** கடந்த 23.02.1985 தேதியிட்ட ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் (Registered in BooK III, Volume 33 at Pages 59 to 63) செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு முதலில் மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.348/1985–ஆக கடந்த 16.06.1985 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும், அதில் இ.ம.வ.எண்.785/1985–ல் கடந்த 04.02.1986 அன்று தற்காலிக தடையுத்தரவு கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும், ஒரு தையல் நாயகி (எ) தைலம்மாள் என்பவர் 1–ம் பிரதிவாதியின் முதல் மனைவி என்றும், 2–ம் எதிர்மனுதாரர் / 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் மகள் என்றும், மேற்படி தையல் நாயகி (எ) தைலம்மாள் கடந்த 19.03.1985 அன்று இறந்துவிட்டதாகவும், கடந்த 16.12.1987 அன்று 1–ம் பிரதிவாதி இறந்த பின்னிட்டு அவரது சட்டப்படியான வாரிசாக 2–ம் பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டதாகவும், அந்த சமயத்தில் அசல் வழக்கு மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்திலிருந்து மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அ.வ.எண்.9/1997–ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும்,

.. 4 ...

பின்னிட்டு மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அ.வ.எண்.175/2004–ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், கடந்த 23.02.1996 அன்று 3–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினரான பத்மினி என்பவர் தாவா 3–ம் இன சொத்துக்கள் அனைத்தையும் தனக்காகவும் தனது இளவர் மகளான 2–ம் எதிர்மனுதாரருக்காகவும் (தையல் நாயகி) R. அருணாசலம் (4–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினர்) மற்றும் V.N.முருகேசன் (5–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினர்) ஆகியோருக்கு விற்பனை செய்யப்பட்டு ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.403/1996–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி கிரயப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அது தாவா சொத்துக்களைப்பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், கடந்த 15.01.2020 அன்று மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்துக்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தினகரன் நாளிதழில் செய்தி வெளியிட்டதாகவும், இ.ம.வ.எண்.785/1985–ல் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக தடையுத்தரவு தற்பொழுது வரை நடைமுறையில் உள்ளதாகவும், இந்நிலையில் 2, 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தின் அனுமதியின்றி தாவா 1, 2 மற்றும் 3 இன சொத்துக்களை பொறுத்து P. ராஜேந்திரன் (6–ம் எதிர்மனுதாரர்) என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி பத்திரம் ஆவண எண்.819/2011–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 6–ம் எதிர்மனுதாரர், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் கடந்த 02.12.2011 அன்று 7–ம் எதிர்மனுதாரருக்கு தாவா 2–வது இன சொத்தை பொறுத்து கிரயம் செய்து கொடுத்ததாகவும், மேற்படி கிரயப்பத்திரத்தில் "ஸ்ரீ சண்முகானந்தா ரைஸ் மில்லாக இருந்து இடிக்கப்பட்டு தற்பொழுது விவசாய நிலமாக இருப்பதில் மேற்புறம் பாதி ஏக்.0.42 செண்ட் விவசாய நிலம் பூராவும்

.. 5 ...

என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும்", ஆனால் மேற்படி ஸ்ரீ சண்முகானந்தா ரைஸ் மில் இடிக்கப்படவில்லை என்றும், 6–ம் எதிர்மனுதாரர் கடந்த 02.12.2011 அன்று ஆத்தூர் சார்பதிவக ஆவண எண்.6807/2011–ன்படி 7–ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் மோசடியானது என்றும், அது வாதிகளை ஏமாற்ற வேண்டி போலியாக தயார் செய்யப்பட்டது என்றும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தாவா சொத்துக்களை பொறுத்து பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தாவா 3–வது இன சொத்தை இரண்டு முறை மோசடியாக விற்பனை செய்துள்ளது கடந்த 16.09.2011 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் மூலமும், கடந்த 02.12.2011 தேதியிட்ட கிரயப்பத்திரம் மூலமும் தெரியவரும் என்றும், அவ்வாறு இரண்டு முறை விற்பனை செய்ய 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், ஏற்கனவே கடந்த 23.02.1996 அன்று 3–ம் எதிர்மனுதாரர் தாவா 3–வது இன சொத்துக்களை தனக்காகவும், தனது இளவர் மகள் தையல் நாயகிக்காவும் 4, 5 எதிர்மனுதாரர்களிடம் விற்பனை செய்துவிட்டதாகவும், 7–ம் எதிர்மனுதாரர் கடந்த 28.05.2020 அன்று 8, 9 எதிர்மனுதாரர்களுடன் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு கடந்த 16.09.2011 மற்றும் 02.12.2011 ஆகிய தேதிகளிட்ட ஆவணங்கள் குறித்து தெரிய வந்ததாகவும், உடனடியாக இதுகுறித்து மாவட்ட பதிவாளர், சார்பதிவாளர், சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் இதனுடன் தொடர்புடைய வருவாய்துறை அலுவலர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதற்கான விசாரணை ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும், தாவா சொத்துக்களை பொறுத்து ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், கடந்த 23.02.1996 தேதியிட்ட கிரயப்பத்திரம், கடந்த 16.09.2011 தேதியிட்ட பொது அதிகார பத்திரம்

.. 6 ...

மற்றும் கடந்த 02.12.2011 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆகியவை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் / வாதிகள்தான் தாவா சொத்துக்களில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகின்றனர் என்றும், அசல் வழக்கு கடந்த 1985–ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் பெயரில் பதிவாகியுள்ளதால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும், இல்லையெனில் மனுதாரர்கள் / வாதிகளுக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் கூறியுள்ளனர்.

3. **<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை 2, 3 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பகுதியாக மறுத்துள்ளனர். மேலும், தாவா சொத்தானது காலம்சென்ற 1–ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டு இறங்குரிமைப்படி 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது என்றும், கடந்த 23.02.1985 தேதியிட்ட உயில் சாசனம் உண்மையானது என்பதால் தாவா தாக்கல் செய்த 1985–ம் ஆண்டிலிருந்தே வாதிகள் வழக்கை தாமதப்படுத்தியும், வழக்கு விசாரணையை தொடங்காமலும் இருந்து வருகின்றனர் என்றும், மனுவில் பத்தி எண்.4, 5–ல் சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றும், மனுவில் 6–ம் பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் மாண்பமை நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டது மற்றும் வழக்கிடை மாற்றம் என்பதால் (Lis Peudence) மனுதாரர்கள் / வாதிகள் வழக்கு நடத்த முனைப்பு காட்டாமல் இம்மனுவை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து வருகின்றனர் என்றும், தாவா சொத்தை பொறுத்து அசல் வழக்கை நடத்தி முடிவு எட்டப்படாமல் இ.ம.வ.எண்.785/1985–ன் உத்தரவை

.. 7 ...

வைத்து மனுதாரர்கள் தகாநிலை ஆதாயம் அடைந்து வருகிறார்கள் என்றும், எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. 5, 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லையென மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

5. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர்கள் / வாதிகள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?*

6. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. **தீர்வு :**

1) மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு முதலில் மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அ.வ.எண்.348/1985–ஆக கடந்த 16.06.1985 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும், அதில் இ.ம.வ.எண்.785/1985–ல் கடந்த 04.02.1986 அன்று தற்காலிக தடையுத்தரவு கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும், ஒரு தையல் நாயகி (எ) தைலம்மாள் என்பவர் 1–ம் பிரதிவாதியின் முதல் மனைவி என்றும், 2–ம் எதிர்மனுதாரர் / 2–ம் பிரதிவாதி,

*.. 8 ...*

1–ம் பிரதிவாதியின் மகள் என்றும், மேற்படி தையல் நாயகி (எ) தைலம்மாள் கடந்த 19.03.1985 அன்று இறந்துவிட்டதாகவும், கடந்த 16.12.1987 அன்று 1–ம் பிரதிவாதி இறந்த பின்னிட்டு அவரது சட்டப்படியான வாரிசாக 2–ம் பிரதிவாதியை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டதாகவும், அந்த சமயத்தில் அசல் வழக்கு மாண்பமை சேலம் சார்பு நீதிமன்றத்திலிருந்து மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அ.வ.எண்.9/1997–ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டதாகவும், பின்னிட்டு மாண்பமை ஆத்தூர் சார்பு நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அ.வ.எண்.175/2004–ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், கடந்த 23.02.1996 அன்று 3–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினரான பத்மினி என்பவர் தாவா 3–ம் இன சொத்துக்கள் அனைத்தையும் தனக்காகவும் தனது இளவர் மகளான 2–ம் எதிர்மனுதாரருக்காகவும் (தையல் நாயகி) R. அருணாசலம் (4–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினர்) மற்றும் V.N.முருகேசன் (5–ம் எதிர்மனுதாரர் / உத்தேச தரப்பினர்) ஆகியோருக்கு விற்பனை செய்யப்பட்டு ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.403/1996–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 15.01.2020 அன்று மனுதாரர்கள் / வாதிகள் தாவா சொத்துக்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாக தினகரன் நாளிதழில் செய்தி வெளியிட்டதாகவும், இ.ம.வ.எண்.785/1985–ல் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக தடையுத்தரவு தற்பொழுதுவரை நடைமுறையில் உள்ளதாகவும், இந்நிலையில் 2, 3 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தின் அனுமதியின்றி தாவா 1, 2 மற்றும் 3 இன சொத்துக்களை பொறுத்து P. ராஜேந்திரன் (6–ம் எதிர்மனுதாரர்) என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி பத்திரம் ஆவண எண்.819/2011–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், 6–ம் எதிர்மனுதாரர், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களின் பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில்

.. 9 ...

கடந்த 02.12.2011 அன்று 7–ம் எதிர்மனுதாரருக்கு தாவா 2–வது இன சொத்தை பொறுத்து கிரயம் செய்து கொடுத்ததாகவும், 7–ம் எதிர்மனுதாரர் கடந்த 28.05.2020 அன்று 8, 9 எதிர்மனுதாரர்களுடன் தாவா சொத்துக்களை பொறுத்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், தற்பொழுதுதான் மனுதாரர்களுக்கு கடந்த 16.09.2011 மற்றும் 02.12.2011 ஆகிய தேதிகளிட்ட ஆவணங்கள் குறித்து தெரிய வந்ததாகவும், உடனடியாக இதுகுறித்து மாவட்ட பதிவாளர், சார்பதிவாளர், சேலம் மாவட்ட ஆட்சியர் மற்றும் இதனுடன் தொடர்புடைய வருவாய்துறை அலுவலர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதற்கான விசாரணை ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நிலுவையில் இருந்து வருவதாகவும், கடந்த 23.02.1996 தேதியிட்ட கிரயப்பத்திரம், கடந்த 16.09.2011 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் மற்றும் கடந்த 02.12.2011 தேதியிட்ட கிரயப்பத்திரம் ஆகியவை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் / வாதிகள்தான் தாவா சொத்துக்களில் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகின்றனர் என்றும், தாவா சொத்துக்கள் சம்பந்தமான ஆவணங்கள் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் பெயரில் பதிவாகியுள்ளதால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளனர். மாறாக 2, 3 எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், தாவா சொத்தானது காலம்சென்ற 1–ம் பிரதிவாதி இராமகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டு இறங்குரிமைப்படி 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையானது என்றும், கடந்த 23.02.1985 தேதியிட்ட உயில் சாசனம் உண்மையானது என்பதால் தாவா தாக்கல் செய்த 1985–ம் ஆண்டிலிருந்தே வாதிகள் வழக்கை தாமதப்படுத்தியும், வழக்கு விசாரணையை தொடங்காமலும் இருந்து வருகின்றனர் என்றும், மனுவில் 6–ம் பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் மாண்பமை நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டது மற்றும் வழக்கிடை மாற்றம் என்பதால் (Lis Peudence) மனுதாரர்கள் / வாதிகள்

.. 10 ...

வழக்கு நடத்த முனைப்பு காட்டாமல் இம்மனுவை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து வருகின்றனர் என்றும், தாவா சொத்தை பொறுத்து அசல் வழக்கை நடத்தி முடிவு எட்டப்படாமல் இ.ம.வ.எண்.785/1985–ன் உத்தரவை வைத்து மனுதாரர்கள் தகாநிலை ஆதாயம் அடைந்து வருகிறார்கள் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர்கள் / வாதிகள் அசல் வழக்கை 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளனர். மேலும் மனுதாரர்கள் / வாதிகள் தங்களுடைய மனுவில், தாவா சொத்துக்கள் சம்பந்தமான கடந்த 23.02.1996, 16.09.2011 மற்றும் 02.12.2011 ஆகிய தேதிகளிட்ட ஆவணங்கள் 3 முதல் 12 எதிர்மனுதாரர்களின் பெயரில் பதிவாகியுள்ளதால் மேற்படி உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 3 முதல் 12 உத்தேச தரப்பினர்களுக்கு எதிராக மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்படுவதை தடுக்கவும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதிக்க முடிவு செய்கிறது.

8. இறுதியாக, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை. .

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு

*.. 11 ...*

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 07–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.11.07 18:31:10 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : இல்லை

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

நீதிமன்ற சாட்சிகள் : இல்லை

நீதிமன்ற சான்றாவணங்கள் : இல்லை

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.11.07 18:31:21 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

மு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.

இ.ம.வ. எண் 04/2022

----------------

அ.வ. எண் 175/2004

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 07.11.2025